முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 93/2021

2024–ம் வருடம் மார்ச் மாதம் 07–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: ஜெயக்குமார் (வா.சா.2) தொழில்: சார்பதிவாளர் (பொ)

த/பெ: வீ.தண்டபாணி இனம்: ஆண்

கிராமம்: பழனி வயது: 42

மாவட்டம்: திண்டுக்கல் நாள்: 07–03–2024

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் பழனி எண்.1 இணை சார்பதிவாளராக பணியாற்றுகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 09.09.1953 தேதியன்று முத்துச்சாமிபிள்ளை என்பவர் தனது மனைவியான பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு உயில் எழுதிவைத்து அந்த ஆவணம் எங்கள் அலுவலகத்தில் 16.09.1953 அன்று ஆவண எண்.26/1953 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை கொண்டுவந்துள்ளேன். அது வா.சா.ஆ.2. அசல் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஆவணம் தான் வா.சா.ஆ.2 ஆகும்.

குறுக்கு விசாரணை: (1–ம் பிரதிவாதி தரப்பில்)

வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்தது சம்பந்தமான விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. உயில் ஆவணத்தை எழுதிவைத்தவர் அதை ரத்து செய்யவும், திருத்தவும், மாற்றவும் அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை

எழுதிவைத்தவர் அதன் பிறகு அதனை ரத்து செய்யவும், மாற்றவும், திருத்தவும் வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை: (2–ம் பிரதிவாதி தரப்பில்)

இல்லை.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.08 10:12:43 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.